www.Padasalai.Net www.CBSEtips.in

R

# முதல் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2023

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் | | | | | |

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

பகுதி - I

I அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 15 x 1 = 15

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால், இவ்வாறு வரும்
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

2. 'காய்ந்த இலையும், காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள்.
   இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
   அ) இலையும் சருகும் ஆ) தோகையும், சண்டும்
   இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

3. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் - இத்தொடரில் இடம்பெற்ற தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே
   அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய
   இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

4. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை,
   அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

5. பாடு இமிழ் பனிக்கடல் பருகி - என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
   அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

6. 'பெரிய மீசை சிரித்தார்' - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
   அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை
   இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை

7. 'உனதருட் பாட்டுகள் பாடுகிறோம்
   உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்' - பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?
   அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
   இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

8. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' - என்னும் அடியில் பாக்கம் என்பது
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

9. காசிக்காண்டம் என்பது
   அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
   இ) காசி நகரத்துப் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்துக்கு வழிப்படுத்தும் நூல்

10. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் - ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
    அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

11. 'மெத்த வணிகலன்' - என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
    அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்
    ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
    இ) ஐம்பெருங்காப்பியங்களும் அணிகலன்களும்
    ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்



Scanned with CamScanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

காற்றே வா,

மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு மனத்தை

மயிலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா

இலைகளின்மீதும், நீர்நிலைகளின்மீதும் உராய்ந்து மிகுந்த

பிராண ரசத்தை எங்களுக்குக் கொண்டு கொடு.

12. இப்பாடலின் ஆசிரியர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) தமிழழகனார் ஈ) வாணிதாசன்

13. மயிலுறுத்து - என்ற சொல்லின் பொருள் கூறுக.
அ) மயங்கச் செய் ஆ) உயிர்வளி இ) மகரந்தத்தூள் ஈ) இனிய வாசனை

14. இப்பாடலில் உள்ள 'பிராண' - எனும் சொல்லின் பொருள்
அ) காற்று ஆ) நிலம் இ) உடல் ஈ) உயிர்

15. மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
அ) மகரந்த, மயிலுறுத்து ஆ) மயிலுறுத்து, இலைகளின்
இ) சுமந்துகொண்டு, வாசனையுடன் ஈ) நீர்நிலை, உராய்ந்து

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. 4 x 2 = 8
(வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

16. விடைகளுக்கேற்ற வினா அமைக்க :
அ) திருமூலர் திருமந்திரத்தை இயற்றினார்
ஆ) தூசு - என்பது பலாப்பிஞ்சைக் குறிக்கும்.

17. பூவின் பல்வேறு நிலைகளைக் கூறுக.

18. வசன கவிதை என்பது யாது?

19. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

20. 'மாஅல்' - பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.

21. 'பல்லார்' - எனத் தொடங்கும் குறளை அடிமாறாமல் எழுதுக.

பிரிவு - 2

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 5 x 2 = 10

22. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், மழை, பூ

23. வேங்கை என்பதை தனி மொழியாகவும், தொடர் மொழியாகவும் வேறுபடுத்துக.

24. முகிழ்த்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. கலைச்சொல் தருக : அ) Homograph ஆ) Folk liteature

26. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைக்க :
1. மலை - மாலை 2. மடு - மாடு

27. எழுது என்றான் - என்பது விரைவு காரணமாக எழுது எழுது என்றான் என அடுக்குத் தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?

28. தமிழெண்களை எழுதுக.
1. நாற்றிசை 2. எண் தொகை

Scanned with CamScanner

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - III

### பிரிவு - 1

இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2 x 3 = 6

29. சோலைக் (பூங்கா) காற்றும், மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

30. இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களை எழுதுக.

31. *பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை அளிக்க.*

நம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று, உண்ண உணவும், இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். "விருந்தே புதுமை" - என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

1. விருந்தோம்பல் என்றால் என்ன?
2. விருந்தினர் என்பவர் யார்?
3. "விருந்தே புதுமை" - எனக் கூறியவர் யார்?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மட்டும் விடையளி. 2 x 3 = 6

( 34 ஆம் வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

32. தமிழழகனார், தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

33. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலை கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

34. 'சிறு தாம்பு' - எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மட்டும் விடையளி. 2 x 3 = 6

35. அலகிட்டு வாய்ப்பாடு தருக.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

36. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு. - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

37. தொகைநிலைத் தொடரின் வகைகளை விளக்குக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 x 5 = 25

38. அ) முல்லைப்பாட்டு குறிப்பிடும் கார்காலச் செய்திகளை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) ஒழுக்கத்தின் சிறப்புகளாக வள்ளுவர் கூறும் கருத்துகளை விவரிக்க.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

*(அல்லது)*


ஆ) 'மரம் இயற்கையின் வரம்' - என்ற தலைப்பிலான கட்டுரைப் போட்டியில், மாநில அளவில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற நண்பனை வாழ்த்தி மடல் எழுதுக.

Scanned with CamScanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. நயம் பாராட்டுக :

"அன்னை மொழியே அழகார்ந்த செந்தமிழே
'முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே.

42. அ) 'இன்சொல் பேசுவதால்' ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க :

1. " If you talk to a man in a language he understands, that goes to his head. you talk to him in his own language that goes to his heart. - Nelson Mande
2. Language is the road map of culture. It tells you where its people come fro and where they are going. - Rita Mae Brown.

பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3 x 8 = 2

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகு விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமி மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

44. அ) 'புயலிலே ஒரு தோணி' - கதையைப் படித்து அதில் இடம்பெற்றுள்ள அடுக்கு தொடர்களும், ஒலிக்குறிப்புச் சொற்களும், புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன.

(அல்லது)

ஆ) அன்னமய்யா என்ற பெயர் பொருத்தமுடையது என்பதை நிறுவுக.

45. அ) முன்னுரை - விதிகளை அறிவோம் - சாலைப் பாதுகாப்பு விதிகள் - ஓட்டுனருக்கா விதிமுறைகள் - தவிர்க்கவேண்டியவை - விழிப்புணர்வு
இக்குறிப்புகளைக் கொண்டு சாலை விதிகள் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) "சான்றோர் வளர்த்த தமிழ்" - என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

******

CS Scanned with CamScanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com